International Peer Reviewed & Refereed Journal, Open Access Journal
ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)

ARIMAA NOKKU
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)

20 • 4 October • December 2026

Published on 14, Oct - Dec 2026 ISSN:2320-4842 (P) 3049-2688 (O)

எடுத்துரைப்பு நோக்கில் மூதுரையும் நல்வழியும்

மா. வெண்மணி
பகுதிநேர முனைவர்பட்ட ஆய்வாளர்
முனைவர் சு. அரங்கநாதன்
உதவிப்பேராசிரியர், தமிழியல் மற்றும் பண்பாட்டுப் புலம்
தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம்
சைதாப்பேட்டை, சென்னை 600 015

சுருக்கம்

தமிழ் இலக்கிய வரலாற்றில் பிற்கால அற இலக்கியங்களின் வளர்ச்சியில் ஔவையார் குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கியுள்ளார். அவர் இயற்றிய ஆத்திசூடி, கொன்றை வேந்தன், மூதுரை, நல்வழி போன்ற அறநூல்கள் மனித வாழ்விற்குத் தேவையான அறம், ஒழுக்கம், கல்வி, நட்பு, பண்பு, ஈகை, மனிதநேயம் போன்ற வாழ்வியல் கருத்துகளை எடுத்துரைக்கின்றன. இவ்வகையில், மூதுரை மற்றும் நல்வழி ஆகிய இரு நூல்களில் இடம்பெறும் அறக்கருத்துகள் எவ்வாறு எடுத்துரைப்பியல் உத்திகளின் வழியாகப் பனுவலாக்கம் பெறுகின்றன என்பதை இக்கட்டுரை ஆராய்கிறது. குறிப்பாக, எதிர்நிலை, உவமை, உருவகம், குறியீடு, காட்சிப்படுத்தல், மீளுரைத்தல் ஆகிய உத்திகளின் வழியாக கல்வி, சான்றோர் தொடர்பு, உதவி, நட்பு, செல்வம், பசி, இன்சொல் போன்ற கருத்துகள் எடுத்துரைக்கப்படும் முறைகள் ஆராயப்படுகின்றன. மேலும், இயற்கைக்கூறுகள், வாழ்வியல் அனுபவங்கள், சமூக உறவுகள் ஆகியவற்றின் வாயிலாக அறக்கருத்துகள் வாசகரிடம் கொண்டு செல்லப்படும் பனுவலாக்க முறையும் விளக்கப்படுகிறது.

முன்னுரை

இலக்கியக் கருத்துகள் வாசகரிடம் எடுத்துரைக்கப்படும் முறையை ஆராய்வதற்குப் பயன்படும் இலக்கியக் கோட்பாடுகளில் எடுத்துரைப்பியல் குறிப்பிடத்தக்கதாகும். இக்கோட்பாட்டின் வழியாகப் பனுவலின் அமைப்பு, மொழியியல் உத்திகள், கருத்தாக்கம் மற்றும் வெளிப்பாட்டு முறைகள் ஆராயப்படுகின்றன. தமிழ் அற இலக்கியங்களில் உவமை, உருவகம், எதிர்நிலை, குறியீடு மற்றும் வாழ்வியல் அனுபவங்கள் ஆகியவற்றின் வழியாக அறக்கருத்துகள் எடுத்துரைக்கப்படுகின்றன. பிற்கால அற இலக்கியங்களான மூதுரை மற்றும் நல்வழி ஆகிய நூல்கள் கல்வி, ஒழுக்கம், சான்றோர் தொடர்பு, உதவி, நட்பு, செல்வம், மனிதநேயம் போன்ற வாழ்வியல் கருத்துகளை முன்வைக்கின்றன. எனவே, இவ்வாய்வு இந்நூல்களில் அறக்கருத்துகள் பனுவலாக்கம் பெறும் முறையையும், அவற்றை வெளிப்படுத்தும் எடுத்துரைப்பியல் உத்திகளையும் ஆராய்ந்து, அவற்றின் காலச்சூழல் மற்றும் வாழ்வியல் பொருண்மைகளை விளக்க முற்படுகிறது. பல்வேறு பொருண்மையின் வழி அறக்கருத்துகளை எடுத்துரைக்கும் திறத்தைப் பற்றி இக்கட்டுரை ஆராய்கின்றது

முதன்மைச் சொற்கள்

எடுத்துரைப்பு, உவமை, உருவகம், எதிர்நிலை, மனிதநேயம்

ஆய்வு அணுகுமுறை

இவ்வாய்வு விளக்கமுறை மற்றும் பகுப்பாய்வு அணுகுமுறைகளை அடிப்படையாகக் கொண்டது. மூதுரை, நல்வழி ஆகிய நூல் களின் பாடல்கள் முதன்மைத் தரவுகளாகவும், அற இலக்கிய வரலாறு, எடுத்துரைப்பியல் கோட்பாடு மற்றும் தொடர்புடைய ஆய்வு நூல்கள் துணைத்தரவுகளாகவும் பயன் படுத்தப்பட்டுள்ளது. எதிர்நிலை, உவமை, உருவகம், குறியீடு, காட்சிப்படுத்தல் போன்ற எடுத்துரைப்பியல் உத்திகளின் வழியாக அறக் கருத்துகள் கட்டமைக்கப்படும் முறைகளைப் பற்றி ஆராயப்படுகிறது. மேலும், கல்வி, ஒழுக்கம், சான்றோர் தொடர்பு, உதவி, நட்பு, செல்வம் உள்ளிட்ட பொருண்மைகளின் அடிப்படையில் பாடல்கள் வகைப்படுத்தப் பட்டு, இரு நூல்களின் ஒத்த மற்றும் வேறுபட்ட எடுத்துரைப்பு முறைகள் ஒப்பீட்டு நோக்கில் விளக்கப்படுகிறது.

ஆய்வின் எல்லை

இவ்வாய்வு மூதுரை, நல்வழி ஆகிய நூல்களின் தேர்ந்தெடுக்கப்பட்ட பாடல்களில் இடம்பெறும் அறக்கருத்துகள் மற்றும் எடுத்துரைப்பியல் உத்திகளை மையப் படுத்துகிறது. உவமை, உருவகம், எதிர் நிலை, குறியீடு போன்ற பனுவலாக்க உத்தி களின் வழியாக அறக்கருத்துகள் வெளிப்படும் முறையே ஆய்வின் முக்கிய நோக்கமாக அமைகிறது. நூல்களில் உள்ள அனைத்து பாடல்களின் விரிவான விளக்கங்கள் இந்த ஆய்வின் எல்லைக்குள் இடம்பெறவில்லை.

எடுத்துரைப்பியல் விளக்கம்

எடுத்துரைப்பியல் (Narratology) என்பது இலக்கியம் சார்ந்த அழகியல் கூறாகும். இலக்கியச் சுவையை மேலும் அதிகப் படுத்துவதாக இம்முறை அமைகின்றது. ஒரு கருத்தை அல்லது நிகழ்வை ஒருவர் மற்றொருவர்க்குச் சொல்லும் வளர்ச்சி நிலையே எடுத்துரைப்பியலாகும். எடுத்து ரைப்பு என்பது பனுவலை உருவாக்கும் செயல் ஆகும். இது மெய்மையாகவும் அமையலாம், புனைவாகவும் அமையலாம் அல்லது இரண்டுமே அமையலாம். எடுத்துரைப்பின் அடிப்படை அலகுகளான நிகழ்ச்சிகள் மொழியை எடுத்துச் சொல்லும் செயல்பாடு ஆகியவை ஒன்றோடு ஒன்று தொடர்பு கொண்டு ஒரு படிநிலை மாற்றமாக உருபெற்று, பின் புனைவாக மாற்றம் பெறுவதை அறியமுடிகிறது.

பிற்கால நீதி இலக்கியங்கள்

தொல்காப்பியத்தில் இடம் பெற்றுள்ள காஞ்சித்திணையிலும், பாடாண்திணையிலும் கூறிய பலதுறைகள் நீதிகளாகவும், தத்துவங் களாகவும் கிளைவிட வகுத்தது. தொல் காப்பியம் மற்றும் சங்க இலக்கியத்தில் பல பாடல்களில் சிறந்த அறிவுரைகள் இடம் பெற்றுள்ளன. இவ்வேர்களிலிருந்து கிளைத்து வளர்ந்தவைதாம் பிற்கால நீதி நூல்கள். இவை சங்ககால அற இலக்கியங்கள் கூறிய அறங்களை வலியுறுத்தியிருக்கின்றன. பிற் கால அறநூல்கள் எளிமையும் சுருக்கமும் கொண்டவையாக உள்ளன. நன்மை செய்தால் கிடைக்கின்ற பயன்கள், வீடுபேறு பெறும் முறைமை, மனிதன் நற்குணமுடன் வாழ வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்து கிறது. தமிழில் நீதிநூல் வகைமை வளர்ச்சி எளிமையும் சிறப்பையும் உடையதாக விளங்குகிறது. தமிழர் கோட்பாடுகளுள் தலையாய கோட்பாடாகத் திகழ்வது அறம். ஒரு பிறப்பில் அறம் செய்தால் மறுபிறப்பில் பேரின்பத்தைப் பெற முடியும், வாழும் காலத்தில் நன்றாக இருப்பர் என்பதே கட்டுரையின் கருதுகோளாகும்

மூதுரையும் நல்வழியும்

ஔவையார் இயற்றிய அறநூல்களுள் மூதுரையும் நல்வழியும் குறிப்பிடத்தக்கவை. ஆத்திசூடி, கொன்றைவேந்தன் ஆகிய நூல்களில் ஓர் அடியின் வாயிலாக எளிய முறையில் அறக்கருத்துகளை உணர்த்திய ஔவையார், மூதுரை மற்றும் நல்வழி ஆகிய நூல்களில் நான்கு அடிகளைக் கொண்ட பாடல்களின் மூலம் வாழ்க்கை நெறிகளையும், மனிதநேயக் கருத்துகளையும் எடுத்துரைக்கிறார். இந்நூல்களில் இடம்பெறும் கல்வி, ஒழுக்கம், சான்றோர் நட்பு, மனித நேயம், உண்மையான நட்பு, செல்வத்தின் நிலையாமை, வேளாண்மையின் சிறப்பு, வரவுக்கேற்ற செலவு மற்றும் இனிய சொல்

போன்றவற்றின் முக்கியத்துவத்தை இந் நூல்கள் வலியுறுத்துகின்றன. இக்கருத்துகள் இன்றைய சமூக வாழ்க்கைக்கும் பொருந்தக் கூடியவையாக அமைந்துள்ளன. குறிப்பாக, தனிமனித முன்னேற்றத்தையும் சமூக நலனை யும் வலியுறுத்தும் இவ்வறக் கருத்துகள் இன்றைய தலைமுறையினருக்கும் வழி காட்டும் வாழ்வியல் நெறிகளாக அமைகின்றன.

எடுத்துரைப்பு முறையில் மூதுரையும் நல்வழியும்

எடுத்துரைப்பியல் படைப்பாளிக்கும் படைப் பிற்கும் இடையே உள்ள நெருங்கிய தொடர்பினை எடுத்துரைக்கிறது. எடுத்துரைப்பியல் கோட்பாடு பனுவல் என்கிற உரைக்கும் படைப்பிற்கும் இடையே உள்ள தொடர்பினை விளக்குவதாகும். மூதுரை பழமையான அறக்கருத்துகளைக் கொண்டுள்ளது. இது வெண்பா யாப்பில் முப்பது பாடல்களைக் கொண்டு தனித்தனிக் கருத்துகளை வெளிப்படுத்துகிறது. நல்வழி மனிதன் நல்லொழுக்கத்துடன் வாழ வேண்டிய முறையை எடுத்துரைப்பதால் இந்நூல் நல்வழி எனப் பெயர் பெற்றது. மக்கள் நல்ல வழியில் நடப்பதற்குரிய அறக்கருக்கருத்துகளைக் கொண்ட, நேரிசை வெண்பாக்களால் ஆன நாற்பது பாடல் களைக் கொண்டுள்ளது. இந்நூல்களில் அறக் கருத்துகள் வெறுமனே அறிவுரைகளாகக் கூறப்படாமல், வாழ்க்கை அனுபவங்கள், உவமைகள், நிகழ்வுகள், பாத்திரங்கள், காரண விளைவு உறவுகள் ஆகியவற்றின் வழியாக படைப்பாளருக்குப் புரியும் வகையில் எடுத்துரைக்கப்படுகின்றது. எனவே, இவ்விரு நூல்களையும் எடுத்துரைப்பு (Narratology) நோக்கில் அணுகும்போது, அறக்கருத்து எவ்வாறு பனுவலாக்கப்பட்டு படைப்பாளரிடம் கொண்டு செல்லப்படுகிறது என்பதை அறிய முடிகிறது.

மூதுரை, நல்வழிப் பாடல்களின் காலச்சூழலும், பனுவலாக்கமும்

மூதுரையின் காலச்சூழல்

ஔவையாரின் ஆத்திசூடி, கொன்றைவேந்தன், மூதுரை, நல்வழி போன்றவை பிற்கால நீதிநூல் களாகும். மூதுரை தோன்றிய காலத்தில் கல்வி, ஒழுக்கம், நல்லோர் தொடர்பு, நன்றி, பணிவு, செல்வத்தின் நிலையாமை, வாழ்க்கை அனுபவம் போன்றவை சமூக வாழ்வின் முக்கிய நெறிகளாக இருந்தன. இத்தகைய சமூகத் தேவைகளுக்கு ஏற்ப, மக்களின் அன்றாட வாழ்க்கை அனுபவங் களை அறக்கருத்துகளாக மாற்றி எடுத்துரைக் கும் தன்மை மூதுரையில் காணப்படுகிறது. மூதுரையின் பாடல்கள் வாழ்க்கையில் ஒருவர் எதிர்கொள்ளக்கூடிய சூழல்களை முன்வைத்து, அவற்றிலிருந்து பெறவேண்டிய நெறியை அறிவுறுத்துகின்றது. எனவே, இதன் காலச்சூழல் என்பது குறிப்பிட்ட வரலாற்றுக் காலத்தைக் குறிப்பிடுவது மட்டுமல்லாமல், அக்காலச் சமூகத்தின் அறம், கல்வி, ஒழுக்கம், உறவு போன்ற தேவைகளையும் உள்ளடக்கியுள்ளது.

நல்வழியின் காலச்சூழல்

நல்வழியும் நூலின் பாடல்கள் மனிதனின் அன்றாட வாழ்க்கை, செல்வம், வறுமை, கல்வி, அறம், விதி, இறைநம்பிக்கை, ஒழுக்கம் போன்ற பல்வேறு வாழ்வியல் நிலைகளை அடிப்படையாகக் கொண்டுள்ளது. நல்வழியின் காலச்சூழலில் நிலையற்ற செல்வம், வறுமையின் தாக்கம், மனிதனின் ஒழுக்கம், கல்வியின் சிறப்பு, அறத்தின் அவசியம் போன்றவை முக்கியமான சமூகப் பிரச்சினைகளாக எடுத்துரைக்கப்படுகின்றது. இதனால் தனிமனித வாழ்க்கையை மட்டும் நோக்காமல், சமூகத்தில் ஒருவர் எவ்வாறு வாழவேண்டும் என்பதற்கான நெறிமுறையை யும் நல்வழி உருவாக்குகிறது.

பனுவலாக்கம்

பனுவலாக்கம் என்பது ஒரு குறிப்பிட்ட காலச் சூழலில் நிலவும் அனுபவங்கள், கருத்துகள், சமூக மதிப்பீடுகள் ஆகியவற்றை மொழியின் வழியாக ஒழுங்குபடுத்தி ஒரு இலக்கியப் பிரதியாக உருவாக்கும் செயல்முறையாகப் பார்க்கலாம்.

மூதுரையின் பனுவலாக்கம்

மூதுரையில் வாழ்க்கை அனுபவங்கள் நேரடியாக அறக்கருத்துகளாக மாற்றப் படுகின்றது. கற்றவரின் சிறப்பு, நல்லோரின் தொடர்பு, நன்றியுணர்வு போன்ற வாழ்க்கை அனுபவங்கள் முதலில் முன்வைக்கப்பட்டு, அவற்றின் அடிப்படையில் மனிதன் பின்பற்ற வேண்டிய நெறி விளக்கப்படுகிறது.

மூதுரையில் உவமை, உருவகம், ஒப்புமை, பழமொழித் தன்மை, எடுத்துக்காட்டு போன்றவை அறக்கருத்துகளை எளிதில் புரியச் செய்யும் பனுவலாக்க உத்திகளாக அமைகின்றன. இதனால் சிக்கலான அறக் கருத்துகள் அன்றாட வாழ்வியல் அனுபவங் களோடு இணைக்கப்படுகின்றன. மேலும், மூதுரையின் பாடல்கள் தனித்தனிக் கருத்து அலகுகளாக அமைந்து, ஒரு பாடல் ஒரு குறிப்பிட்ட வாழ்க்கை நெறியை எடுத்துரைக்கிறது. எனவே இதன் பனுவலாக்கம் 'ஒரு பாடல், ஒரு வாழ்க்கைப் பாடம்' என்ற அடிப்படையில் அமைந்துள்ளது.

நல்வழியின் பனுவலாக்கம்

நல்வழியில் மனித வாழ்க்கையின் பல்வேறு நிலைகள் அறக்கருத்துகளாகப் பனுவலாக்கம் பெறுகின்றது. நல்வழி செல்வத்தின் நிலையாமை பற்றிப் பேசும்போது செல்வம் எவ்வாறு மாறக்கூடியது என்பதை வாழ்க்கை அனுபவத்தோடு இணைத்து, இறுதியில் அறமே நிலையான துணை என்ற கருத்தை நோக்கி எடுத்துச் செல்கிறது. நல்வழிப் பாடல்களில் செல்வம், பசி, மானம், கல்வி, அறம் போன்றவைஒன்றோடொன்று தொடர்பு படுத்தப்பட்டுள்ளது. நல்வழியின் இறுதிப் பாடலில் திருக்குறள், நான்மறை, தேவாரம், திருவாசகம், திருமூலர் போன்ற மரபுகளை ஒரே அறநெறிச் சிந்தனைக்குள் இணைக்கும் தன்மையும் காணப்படுகிறது. இதனால் நல்வழியின் பனுவலாக்கம் தனிமனித அறத்தைக் கடந்து தமிழின் அற, சமய மரபுகளின் தொடர்ச்சியையும் வெளிப் படுத்துகிறது.

மூதுரைப் பாடல்களின் கல்வி

கல்வி விளக்கம்

கல்வி மனித மனத்தை மேம்படுத்துவது, ஒழுக்கமான வாழ்க்கை வாழக் கற்றுத் தருவது; மனிதன் மனிதனாக வாழ வழிகாட்டுவது 'அறிவை அற்றம் காக்கும் கருவி' என்பார் வள்ளுவர். அந்த அறிவு பக்குவப்பட்டு ஒளிர்வது கல்வி அறிவால்தான். கல்வி கற்கும் வாய்ப்பு சில நாட்கள்தான் வாழ்க்கையில் கிடைக்கிறது. இதனை நாலடியார் 'கல்வி கரையில, கற்பவர் நாள் சில' எனக் கூறுகிறது.

கல்விக்கு நிகரில்லை

"மன்னனும் மாசுஅறக் கற்றோனும் சீர்தூக்கி மன்னனின் கற்றோன் சிறப்பு உடையவன் மன்னற்குத்" - மூதுரை: 26

கற்றாரைக் கற்றவர் விரும்புவர்

"நல்தா மரைக் கயத்தில் நல்அன்னம் சேர்ந்தாற்போல்

...காக்கை உனக்கும் பிணம்" - மூதுரை: 24

எனும் பாடல் வரிகள் கல்வியின் சிறப்பை எடுத்துரைக்கிறது. மன்னனைவிடக் கற்றவனே சிறந்தவன் என்றும், கற்றோருக்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு கிடைக்கும் என்றும் எதிர்நிலை, ஒப்புமை வழியாக கல்வியின் உயர்வு விளக்கப்படுகிறது. கற்றவர், கல்லாதவர், நல்லோர், மூர்க்கர், அன்னம், காக்கை ஆகிய எதிர்நிலைகளின் மூலம் மனிதர்களின் பண்பும் சமூக உறவும் எடுத்துரைக்கப்படுகின்றன. உவமை, உருவகம், குறியீடு, காட்சிப்படுத்தல் போன்ற உத்திகளின் வழியாக, கற்றோர் கற்றோரை யும், மூர்க்கர் மூர்க்கரையும் நாடுவர் என்ற அறக்கருத்து வெளிப்படுகிறது. அன்னம் - காக்கை, தாமரைக் கயம்-முதுகாடு ஆகியவை சமூகப் பண்புகளின் குறியீடுகளாக அமைகின்றன. ஆசிரியக் குரல் மூலம் கல்வி மற்றும் நல்லோரின் தொடர்பின் சிறப்பு வலியுறுத்தப்படுகிறது. இதே கல்விக் கருத்தை,

"மானங் குலங்கல்வி வண்மை அறிவுடைமை

.. பத்தும் பசிவந் திடப்பறந்து போம்" - நல்வழி: 26

நல்வழி பாடலில் பசி, உயர்பண்புகள் என்ற எதிர்நிலையின் மூலம் பசியின் கொடுமை எடுத்துரைக்கப்படுகிறது. பட்டியலிடுதல், மிகைப்படுத்தல், எதிர்நிலை ஆகிய உத்தி களின் வழியாக, பசி வந்தால் மானம், கல்வி, அறிவு போன்ற சிறப்புகள் மறைந்து விடும் என்ற அறக்கருத்து எடுத்துரைக்கப் படுகிறது.

கல்லாதவர் நிலை

"கான மயிலாடக் கண்டிருந்த வான்கோழி தானும் அதுவாகப் பாவித்து, தானும்தன் பொல்லாச் சிறகைவிரித்து ஆடினாற்

போலுமே

கல்லாதான் கற்ற கவி" - மூதுரை:14

இப்பாடல் வரிகள் மூலம் மயில், வான்கோழி என்ற எதிர்நிலை வழியாக, கற்றவர், கல்லாதவர் என்ற மனித எதிர்நிலை எடுத்துரைக்கப்படுகிறது. மயிலின் இயல்பான ஆட்டத்தைக் கண்டு வான்கோழி அதனைப் போல ஆடமுயல்வது, கல்லாதவன் கற்றவனைப் போலக் கவிதை இயற்ற முயல்வதற்கு உவமையாக அமைகிறது. இங்கு மயில் அறிவானது இயல்புத் திறனையும், வான்கோழி அறியாமையானது போலிப் பின்பற்றலையும் குறிக்கும் குறியீடுகளாக அமைகின்றன. இதன் மூலம் காட்சி, உவமை, எதிர்நிலை, குறியீடு போன்ற எடுத்துரைப்பியல் உத்திகளின் வழியாக அறக்கருத்து வெளிப்படுத்தப் படுகிறது.

"கவைஆகி, கொம்புஆகி, காட்டகத்தே நிற்கும்

...குறிப்புஅறிய மாட்டா தவன்நல் மரம்" - மூதுரை:13

இப்பாடல் வரி மூலம் மரம், மனிதன் என்ற உருவகத்தின் வழியாக அறிவின்மையின் நிலை எடுத்துரைக்கப்படுகிறது. காட்டில் கிளைகளுடன் நிற்கும் மரத்தைப் போல, சபையில் ஓலை வாசித்தும் அதன் குறிப்பைப் புரிந்துகொள்ள இயலாதவன் பயனற்றவனாக உருவகப்படுத்துகிறான். இங்கு மரம் அறிவில்லாத மனிதனுக்கான குறியீடாகவும், சபை அறிவு வெளிப்படும் சமூகச் சூழலாகவும், ஓலை வாசித்தல் கல்வி அறிவின் அடையாளமாகவும் அமைகிறது. ஒப்புமை, உருவகம், குறியீடு, எதிர்நிலை, காட்சிப்படுத்தல் ஆகிய எடுத்துரைப்பியல் உத்திகளின் மூலம் கல்வி கற்றல் மட்டுமன்றி, அதன் பொருளை உணர்ந்து செயல்படுதலே அறிவின் பயன் என்ற அறக்கருத்து எடுத்துரைக்கப்படுகிறது. இதே கருத்தை நல்வழி பாடலும்

"கல்லானே ஆனாலும் கைப்பொருள்ஒன்று உண்டாயின்

சென்று அங்கு எதிர்கொள்வர்; இல்லானை இல்லாளும் வேண்டாள்" - நல்வழி: 34

மூலம் அறிவில்லாதவன், பொருளுடையவன், உள்ளவன், இல்லாதவன் என்ற எதிர்நிலை கள் மூலம் செல்வத்தின் சமூக மதிப்பு எடுத்துரைக்கப்படுகிறது. எதிர்நிலை, மிகைப் படுத்தல், உருவகம் ஆகிய உத்திகளின் வழியாக, செல்வம் இல்லாதவரைச் சமூகம் மதிக்காத நிலை பற்றி எடுத்துரைக்கப் படுகிறது.

சுருக்கமாக பனுவலாசிரியர் பனுவலில் உள்ள கருத்துகளை மூதுரையில் மரம் - மனிதன், கற்றவர் - கல்லாதவர் போன்ற உருவகம் மற்றும் எதிர்நிலைகள் மூலம் கல்வியின் பயன் எடுத்துரைக்கப்படுகிறது. நல்வழியில் பொருளுடையவன் - பொருளற்றவன், உள்ளவன் - இல்லாதவன் போன்ற எதிர்நிலைகள் மூலம் செல்வத்தின் சமூக மதிப்பு வெளிப்படுத்தப்படுகிறது. இரு பனுவல்களிலும் உவமை, உருவகம், குறியீடு, எதிர்நிலை, காட்சிப்படுத்தல் போன்ற உத்திகள் வழியாக வாழ்வியல் அறக் கருத்துகள் எடுத்துரைக்கப்படுகின்றது.

சான்றோர்

சான்றோர் என்போர் அறிவிலும், ஒழுக்கத்திலும் சிறந்து விளங்குபவர். நல்ல பண்புகள் கொண்ட சான்றோர்களுடன் தொடர்புகொண்டுவாழவேண்டும் என்பதைப் பின்வரும் பாடல் வரி குறிப்பிடுகிறது.

நல்லாரைக் காண்பதுவும் நன்றே; நலம்மிக்க நல்லார்சொல் கேட்பதுவும் நன்றே; நல்லார்" - மூதுரை: 8

நல்லாரைக் காணுதல், நல்லார் சொல் கேட்டல், அவர்களின் குணங்களைப் பேசுதல் அவர்களோடு இணைந்து வாழ்தல் என்ற தொடர்ச்சியான எடுத்துரைப்புக் கட்டமைப்பு காணப்படுகிறது. இங்கு "நல்லார்" என்பவர் நற்பண்பின் குறியீடாகவும், அவர்களைக் காணுதல், கேட்டல்,உரைத்தல், இணங்குதல் போன்ற செயல்கள் நல்லொழுக்கத்தைப் பெறும் படிநிலைகளாகவும் எடுத்துரைக்கப் படுகின்றன. மீளுரைத்தல், செயல் வரிசை, பாத்திரக் கட்டமைப்பு, குறியீடு, அறிவுரைக் குரல் ஆகிய உத்திகளின் வழியாக, நல்லோரின் தொடர்பு மனிதனின் பண்பையும் வாழ்வையும் மேம்படுத்தும் என்ற அறக் கருத்து வெளிப்படுகிறது. அதேபோல்

"அட்டாலும் பால்சுவையின் குன்றாது

அளவளாய்

நட்டாலும், நண்புஅல்லார் நண்புஅல்லர்"
- மூதுரை:4

என்ற பாடல் வரிகள் மூலம் பால் மற்றும் சங்கின் இயல்பை எடுத்துக்காட்டி சான்றோரின் பண்பு எடுத்துரைக்கப்படுகிறது. துன்பம் வந்தாலும் மேன்மக்கள் தம் பண்பை இழக்கமாட்டார்கள் என்ற கருத்தை உவமை, குறியீடு, எதிர்நிலை போன்ற உத்திகளின் வழியாக வெளிப்படுகிறது. இதன் மூலம் மனிதனின் இயல்பான பண்பே சிறப்பு என்ற அறக்கருத்து கூறப்படுகிறது

உதவி

நல்லார் ஒருவர்க்குச் செய்த உபகாரம்

கல்மேல் எழுத்துப்போல் காணுமே; அல்லாத

ஈரம்இலா நெஞ்சத்தார்க்கு ஈந்த உபகாரம்

நீர்மேல் எழுத்திற்கு நேர் - மூதுரை:2

இப்பாடலில் நல்லார், அல்லாதார் என்ற எதிர்நிலையின் மூலம் மனிதர்களின் பண்பு எடுத்துரைக்கப்படுகிறது. நல்லோருக்குச் செய்த உதவி கல்மேல் எழுத்து போல நிலைத்திருப்பதாகவும், நன்றியற்றோருக்குச் செய்த உதவி நீர்மேல் எழுத்து போல மறைந்துவிடுவதாகவும் உவமை வழியாகக் கூறப்படுகிறது. எதிர்நிலை, உவமை, குறியீடு ஆகிய எடுத்துரைப்பியல் உத்திகளின் மூலம் நல்லவர்களுக்குச் செய்யும் உதவி நிலையான பயனைத் தரும், நன்றியற்றோ ருக்குச் செய்த உதவி பயனற்றதாகும் என்ற அறக்கருத்து வெளிப்படுகிறது.

வேங்கை வரிப்புலிநோய் தீர்த்த விடகாரி

ஆங்குஅதனுக்கு ஆகாரம் ஆனாற்போல் பாங்குஅறியாப் புல்லறி- மூதுரை:15

இப்பாடலில் வேங்கை புலி உருவகத்தின் மூலம் புல்லறிவாளர்க்குச் செய்யும் உதவி யின் பயனின்மை எடுத்துரைக்கப்படுகிறது. புலியின் நோயைத் தீர்க்கும் மருந்தே பின்னர் அதற்கே உணவாக மாறுவது போல, அறிவும் பண்பும் அறியாதவர்களுக்குச் செய்யும் உதவி கல்லின்மேல் இட்ட கலம் போல் பயனற்றதாகும். உவமை, உருவகம், எதிர்நிலை, குறியீடு போன்ற எடுத்துரைப் பியல் உத்திகளின் வழியாக, தகுதியறிந்து உதவி செய்தல் வேண்டும் என்ற அறக் கருத்து வெளிப்படுகிறது.

உதவி

அற்ற குளத்தின் அறுநீர்ப் பறவைபோல்

உற்றுழித் தீர்வார் உறவுஅல்லர் அக்குளத்தில்

கொட்டியும் ஆம்பலும் நெய்தலும் போலவே

ஒட்டி உறுவார் உறவு" - மூதுரை:17

இந்தப் பாடல் வரிகள் மூலம் அற்ற குளம் நிறைந்த குளம் என்ற எதிர்நிலையின் மூலம் சுயநல உறவு உண்மையான உறவு எடுத்துரைக்கப்படுகிறது. நீர் வற்றிய குளத்தை விட்டுப் பறவைகள் நீங்குவது போல, துன்பகாலத்தில் விலகுபவர்கள் உண்மையான உறவினர் அல்லர். ஆனால், குளத்தில் நீர் இருந்தாலும் இல்லாவிட்டாலும் அதனுடன் இணைந்திருக்கும் கொட்டி, ஆம்பல், நெய்தல் போல நிலைத்திருப்ப வர்களே உண்மையான உறவினர். உவமை, எதிர்நிலை, குறியீடு ஆகிய எடுத்துரைப்பியல் உத்திகள் மூலம் துன்பத்திலும் துணை நிற்கும் உறவே உண்மையான உறவு என்ற அறக்கருத்து எடுத்துரைக்கப்படுகிறது.

மாமலையில் உள்ள மருந்தே பிணிதீர்க்கும்;

அம்மருந்து போல்வாரும் உண்டு
- மூதுரை:20

இப்பாடலில் உடன்பிறந்தோர், உடன்பிறவா தோர், நோய், மருந்து என்ற எதிர்நிலைகளின் மூலம் உறவுகளின் இயல்பு எடுத்துரைக்கப் படுகிறது. உருவகம், எதிர்நிலை, குறியீடு ஆகிய உத்திகளின் வழியாக, பிறப்பைவிட அன்பும் உதவியும் கொண்ட நல்லுறவே சிறந்தது என்ற அறக்கருத்து வெளிப்படுகிறது.

இன்சொல்

வெட்டெனவை மெத்தெனவை வெல்லாவாம்; வேழத்தில்

பட்டுஉருவும் கோல்பஞ்சில் பாயாது
– நல்வழி: 33

பாடல் வரிகள் மூலம் பனுவலாசிரியர் மென்மை, வன்மை, வலிமை, பலவீனம் என்ற எதிர்நிலைகளின் மூலம் மனித முயற்சியின் தன்மையை எடுத்துரைப்பதை அறிய இயலுகிறது. உவமை, எதிர்நிலை, காட்சிப்படுத்தல் ஆகிய உத்திகளின்

வழியாக, கடினமானவற்றைக் காட்டிலும் பொருத்தமான முறையில் அணுகப்படும் செயல்கள் எளிதில் வெற்றியடையும் என்ற அறக்கருத்து வெளிப்படுகிறது.

பாடல் கருத்துகளின் தொகுப்பாக

மூதுரை மற்றும் நல்வழிப் பாடல்களில் எதிர்நிலை, உவமை, உருவகம், குறியீடு, காட்சிப்படுத்தல், மிகைப்படுத்தல், மீளுரைத்தல் போன்ற எடுத்துரைப்பியல் உத்திகள் வழியாக அறக்கருத்துகள் வெளிப்படுத்தப்படுகின்றன. கற்றவர்-கல்லாதவர், நல்லார்-அல்லாதார், மேன்மக்கள்-பிறர், உள்ளவன்-இல்லாதவன், உண்மையான உறவு-போலி உறவு போன்ற எதிர் நிலைகள் மூலம் மனிதப் பண்புகள் எடுத்துரைக்கப்படுகின்றன. மயில், அன்னம், காக்கை, மரம், பால், சங்கு, கல், நீர், குளம் போன்ற இயற்கைக் கூறுகள் மனித வாழ்வின் குறியீடுகளாகவும் உருவகங்களாகவும் அமைகின்றன. இதன் வழியாக கல்வி, நல்லொழுக்கம், நன்றி, நட்பு, உதவி, உறவு, செல்வம், முயற்சி, பசி போன்ற வாழ்வியல் அறக்கருத்துகள் எடுத்துரைக்கப்படுகின்றன. ஒட்டுமொத்தமாக, இரு பனுவல்களும் வாழ்வியல் அனுபவங்களையும் இயற்கைக் காட்சிகளையும் இணைத்து, நல்ல வாழ்வுக்குத் தேவையான அறநெறிகளை எளிமையாகவும் வலிமையாகவும் எடுத்துரைக்கிறது.

முடிவுரை

மூதுரை மற்றும் நல்வழி ஆகிய அற நூல்களை எடுத்துரைப்பியல் நோக்கில் ஆராய்ந்ததன் மூலம், அவற்றில் அறக்கருத்துகள் எதிர்நிலை, உவமை, உருவகம், குறியீடு, காட்சிப்படுத்தல் போன்ற உத்திகளின் வழியாக வெளிப்படுத்தப் படுகின்றன என்பதை அறிய முடிகிறது. மூதுரையில் இயற்கைக் கூறுகள் மற்றும் வாழ்வியல் அனுபவங்களின் வழியாகக் கல்வி, சான்றோர் தொடர்பு, நன்றி, உதவி, உண்மையான உறவு போன்ற கருத்துகள் எடுத்துரைக்கப்படுகின்றன. நல்வழியில் செல்வம், வறுமை, பசி, கல்வி, ஒழுக்கம் ஆகிய வாழ்வியல் நிலைகள் எதிர்நிலைகள் மற்றும் அனுபவக் கூறுகளின் மூலம் வெளிப்படுத்தப்படுகின்றன. எனவே, இவ்விரு நூல்களும் இயற்கை உவமைகள், சமூக அனுபவங்கள் மற்றும் மொழியியல் உத்திகளின் வழியாக வாழ்வியல் அறக்கருத்துகளைப் பனுவலாக்கம் செய்து, தமிழ் அற இலக்கிய மரபில் குறிப்பிடத்தக்க இடத்தைப் பெறுகின்றன.

பயன்பட்ட நூல்கள்

1.கதிர்முருகு, (2010). பிற்கால நீதி இலக்கிய வரலாறு, நாம் தமிழர் பதிப்பகம், சென்னை-05

2.சிவா, கி., (2020). பத்துப்பாட்டின் எடுத்துரைப்பியல், இலட்சுமி பதிப்பகம், சுந்தரம்பிள்ளை, திருப்பத்தூர்- 635 654

3.அறவாணன் க.ப., (2011). அற இலக்கியக் களஞ்சியம், தமிழ்க் கோட்டம், அமைந்தகரை, சென்னை-29.

4.சிவா, கி., (2020). எடுத்துரைப்பியல் நோக்கில் கையறுநிலைப் பாடல்கள், இலட்சுமி பதிப்பகம், சுந்தரம்பிள்ளை, திருப்பத்தூர்- 635 654.

5.பொதிகைத் தமிழரசன், (2008). சமூகவியல் நோக்கில் நீதி இலக்கியம், பொன்மணி பதிப்பகம், தலையாரிபட்டி, இணங்கனூர், அரவக்குறிச்சி, கரூர்-639205.

6.வேலுப்பிள்ளை, ஆ., (2016). தமிழ் இலக்கியத்தில் காலமும் கருத்தும், குமரன் புத்தக இல்லம், 3 மெய்கை விநாயகர் தெரு, குமரன் காலனி, வடபழனி, சென்னை- 26.

7.அறவாழி, அ.பு., (2016). நீதி நூல்கள்1, பூம்புகார் பதிப்பகம், சென்னை- 600க108

8.வேங்கடசாமி, ந. மு., (2018). கொன்றை வேந்தன் (நீதிநூல்கள்), பூம்புகார் பதிப்பகம், சென்னை- 600க108

9.பஞ்சாங்கம் க. (2016). இலக்கியமும் திறனாய்வுக் கோட்பாடுகளும், அன்னம், மனை எண்1, நிர்மலா நகர், தஞ்சாவூர்-17.

https://www.tamilvu.org/courses/degree/c012/c0122/html/c01223eg.htm

https://www.tamilvu.org/ta/courses-degree-c012-c0122-html-c012230-14796